## ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2024

--------------------------------------------------------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களிற்கு உரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1953 இன் 44 இலக்க பாடசாலை சார்ந்த ஆசிரியர்களின் ஓய்வூதிய கட்டளைச் சட்டத்தின் 5 மற்றும் 9 பிரிவுகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட பிரமாணங்களில் 6(1) பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு கல்வி வலயத்தில் மீளாய்வாண்டில் ஏப்ரல் மாதத்திற்கு உரிய பங்களிப்பு பணம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் கைவிடப் பட்டமையால் வருமான செலவினக் கணக்கில் ஆண்டுக்குரிய பங்களிப்புப் பணம் ரூபா 4,035,793 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கொழும்பு கல்வி வலயத்தில் இருந்து அனுப்பப்பட்ட 2024 ஏப்ரல் மாதத்திற்குரிய பங்களிப்புப் பணமாக 2024 மே மாதம் 14 ஆம் திகதி கிடைக்கப் பெற்ற ரூபா 4,035,793.16 தொகைக்கு உரிய காசோலை வழுக்களுடன் காணப்பட்டமையால் மீளத் திருப்பி அனுப்பப்பட்டது. அந்த தொகை 2024.06.06 ஆந் திகதி கிடைக்கப் பெற்றதுடன் 2024 ஆம் ஆண்டுக்கு உரிய 20.04.02.00 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | கணக்காண்டிற்குரிய வருமானம் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பங்களிப்பு பண மீதியில் களுத்துறை கல்வி வலயத்திற்குரிய திசெம்பர் மாதத்திற்குரிய பெறுவனவுகள் இரு தடவை குறிப்பிடப்பட்டமையால் ஐந்தொகையில் கிடைக்க வேண்டிய | 2024 ஒக்தோபர், நவம்பர், திசெம்பர் மாதங்களுக்காக ரூபா 122,104 மற்றும் 2024 திசெம்பர் மாத தவணைப் பணமான ரூபா 122,104 தனித்தனியாக 2024 ஆம் ஆண்டிற்குரிய 2025 ஆம் | உரிய ஆண்டில் கிடைக்க வேண்டிய வருமானம் சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பு பண மீதி ரூபா 122,104 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டில் பெறுவனவுகளின் கீழ் சீராக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2024 ஆம் ஆண்டின் ஒரு பாடசாலையில் ஆகஸ்ட் மாதத்திற்கான பங்களிப்பு பணம் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிலுவை பங்களிப்புப் பணம் கணிப்பிடப்பட்டு பெற வேண்டிய பங்களிப்பு பண மீதியில் உள்ளடக்கப்படவில்லை. | ஆகஸ்ட் மாதம் காசோலை மீளத் திருப்பி அனுப்பிய பின்னர் அந்த காசோலை தற்போது மீண்டும் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதில் 2024 ஆம் ஆண்டிற்குரியவை 2025 ஆம் ஆண்டின் மொத்த பெறுவனவு அளவில் சீராக்கப்பட்டுள்ளது. | நிலுவை பங்களிப்புப் பணத்தை கணிப்பிட்டு பெற வேண்டிய பங்களிப்பு பண மீதியில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஈ) | விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு 08 சதவீதம் வரை அதிகரித்துச் சென்ற போதிலும் களுத்துறைக் கல்வி வலயத்தில் ஒரு மகளிர் கல்லூரியில் 2024 ஏப்ரல் முதல் திசெம்பர் வரையும், மேலும் ஒரு பாடசாலையில் 2024 ஏப்ரல் முதல் செப்தெம்பர் வரையும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்பிற்கு 06 சதவீத பங்களிப்பு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதனால் இரண்டு பாடசாலைகளுக்கும் உரிய நிலுவை பங்களிப்புப் பணம் ரூபா 347,375 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பங்களிப்பு பண மீதி அதில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை கல்வி வலயத்திற்குரிய மகளிர் கல்லூரியில் 2024 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரை நிலுவை மற்றும் மற்றைய பாடசாலையில் 2024 ஏப்ரல் முதல் செப்தெம்பர் மாதம் வரை நிலுவை 2024 ஆம் ஆண்டிற்குரியவை 2025 இன் சீராக்கத்தின் பெறுவனவுகளின் கீழ் சீராக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிலுவை பங்களிப்பு பணத்தை உரிய ஆண்டின் போது பெற்றுக் கொள்வதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்துள்ளார். | நிலுவை பங்களிப்பு பணத்தை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய சட்டத்தின் | | | | |
| (i) | கட்டளை இலக்கம் 04 | ஆசிரியர் விதவைகள் பங்களிப்பு தொகையில் நிதியம் ஒன்றை கட்டியெழுப்புவதன் மூலம் ஆசிரியர் விதவை ஓய்வூதியம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் பங்களிப்பு பணம் சேகரித்தல் மற்றும் | பிரிவெனாக்கள் மற்றும் தனியார் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்காக விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் செலுத்துதல் வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற திரண்ட | சட்டத்தின் கட்டளையின் பிரகாரம் நிதியத்தை கட்டி எழுப்புவற்கு அதன் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவுகளுக்காக நிதியத்திற்காக தனித்தனியாக வங்கிக் கணக்கு ஒன்று பேணிச் செல்லப்படாமல் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் கணக்கிற்கு பங்களிப்புப் பணம் சேகரிக்கப்பட்டதுடன் ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதியத்தில் 253 என்ற ஒதுக்கீட்டுத் தலைப்பில் மேற்கொள்ளப்படுகின்றமையால் ஆசிரியர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் ஸ்தாபிக்கும் நோக்கம் நிறைவேற்றப்படுகின்றது. | எடுத்தல் வேண்டும். |
| (ii) | கட்டளை இலக்கம் 9(அ) | ஒவ்வொரு பங்களிப்புப் பணம் செலுத்துவதற்கு தகைமை பெற்ற மற்றும் பங்களிப்பு பணம் செலுத்துபவர் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | மாகாணங்களில் இருந்து செலவு வைக்கப்படுகின்ற பெறுமதி மாத்திரம் செலவு அறிவித்தல் மூலம் எங்களுக்கு அனுப்பப்படுவதுடன் அந்த பங்களிப்பு பணம் அறவிடல் தொடர்பான விபரங்கள் அனுப்புதல் எதுவும் மேற்கொள்ளப்படுவது இல்லை. அதாவது ஆசிரியர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பதிவு செய்த பிரிவெனாக்கள் மற்றும் அரசாங்கத்தின் உதவி பெறுகின்ற தனியார் பாடசாலையில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்காக பாடசாலையின் பெயரில் தனித்தனியாக அவர்களின் தகவல்களை உள்ளடக்கிய விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கோவை ஒன்று பேணிச் செல்லப்படுகின்றது. | பங்களிப்புப் பணம் செலுத்துபவர்கள் தொடர்பான முறையான தகவல் முறைமை ஒன்றை பேணிச் செல்லல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 550,673,061 மிகையான இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 437,633,305 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 113,039,756 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கான பங்களிப்பு பணம் பெறுவனவு ரூபா 120,207,536 அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கத்தவர்களின் பெயர், பாடசாலை உள்ளடக்கிய பதிவேடு ஒன்று பேணிச் | அடிப்படைத் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமை ஒன்றை நிர்மாணிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யும் | நிதியத்தின் அங்கத்தகவர்கள் தொடர்பாக நாளது |

| | | | |
|---|---|---|---|
| | செல்லப்படாமையின் காரணமாக நிதியத்திற்கு வருடாந்தம் உள்ளபடியாக கிடைக்க வேண்டிய தொகை, கிடைக்கப் பெற்ற தொகை மற்றும் நிலுவைப் பணம், நிதியத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை, மீளாய்வாண்டின் புதிய அங்கத்துவத்தை பெற்றவர்களின் எண்ணிக்கை மற்றும் நிதியத்தின் அங்கத்துவத்தில் இருந்து விலகிச் சென்றவர்களின் எண்ணிக்கை தொடர்பான சரியான தகவல்களை சரியாக இனங்காண்பதற்கு முடியாது இருந்தது. | பணிக்காக பிரிவெனாக்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளின் உதவியும் தேவையாகும். எனினும் இந்த ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தும் போது நிலுவை விதவைகள் அநாதைகள் பங்களிப்பு பணம் கணிப்பிடப்பட்டு அந்த நிலுவைப் பணம் அறவிடப்பட்ட பின்னர் மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | வரையாக்கப்பட்ட பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் நோக்கம் திரண்ட நிதியத்தில் 253 என்ற ஒதுக்கீட்டுத் தலைப்பில் நிறைவேற்றப்படுகின்றமையால் இந்த நிதியம் அத்தியவசியமாக இல்லாதிருந்த போதிலும் நிதியத்திற்குரிய சட்டத்தை திருத்த வேண்டுமென முன்மொழியப்பட்டிருந்த போதும் அந்த முன்மொழிவுகள் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 07/2016 இன் பிரகாரம் 2016 இன் பாதீட்டு முன்மொழிவு இலக்கம் 425 மற்றும் 426 இன் மூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்ட முறைமைக்கு இணங்க நியதிச் சட்டம் மற்றும் நியதிச் சட்டம் அல்லாத நிதியம் மீளாய்வு செய்யப்பட்டு பாராளுமன்ற நிர்வாகத்தின் கீழ் உறுதிப்படுத்தும் வகையில் பொதுத் திறைசேரியினால் நியமிக்கப்படுகின்ற விசேட குழு ஒன்றினால் இந்த நிதியத்திற்குரிய சட்டம் திருத்தப்பட்டு மூடவேண்டுமென முன்மொழியப்பட்டிருந்த போதும் அந்த குழுவின் இறுதித் தீர்மானம் இதுவரை கிடைக்காதிருந்ததுடன் 2025.01.16 ஆந் திகதி அரச நிதி பணிப்பாளர் நாயத்தின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதும் இது தொடர்பாக கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டிருந்தது. எனினும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படாமையினால் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரித்து உரிய பிரகாரம் புத்தகங்கள் பேணிச் செல்லப்படுகின்றது. | சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு உரிய அதிகாரத் தரப்பினருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |